சுருக்கம்

பள்ளிக் கல்வி – மேல்நிலைக் கல்வி – தொழிற் கல்வி – 92 தொழிற் கல்வி ஆசிரியர் நிலை–1 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது – 31.12.2014 வரை பணியிட தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டது – 01.01.2015 முதல் 31.12.2015 வரை தொடர் நீட்டிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி (ப.க2(2)த் துறை

அரசாணை (2டி) எண்.11

நாள் : 02. 02 .2015
திருவள்ளுவராண்டு 2046
தை மாதம் 19 ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.39, பள்ளிக் கல்வித் துறை, நாள் 12.2.1999.
2. அரசாணை (2டி) எண்.35, பள்ளிக் கல்வித் துறை, நாள் 23.07.2007.
3. அரசாணை (நிலை) எண்.69, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20.3.2007.
4. அரசு கடித (1டி) எண்.4, பள்ளிக் கல்வித் துறை, நாள் 03.01.2008.
5. அரசாணை (2டி) எண்.36, பள்ளிக் கல்வித் துறை, நாள் 22.07.2009.
6. அரசாணை(2டி) எண்.14, பள்ளிக் கல்வித்(விஇ) துறை, நாள் 20.04.2012.
7. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 095264/ எல்3/2014, நாள்–04.12.2014.

******

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் முதன் முதலாக தோற்றுவிக்கப்பட்ட 92 தொழிற் கல்வி ஆசிரியர் நிலை-II பணியிடங்களுக்கு மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் 31.12.2008 வரையில் தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேலே 3ல் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்காண் பணியிடங்கள் தொழிற் கல்வி ஆசிரியர் நிலை-I பணியிடங்களாக பட்டதாரி ஆசிரியர் ஊதிய விகிதத்தில் நிலை உயர்த்தப்பட்டன. இது குறித்து மேலே 4ல் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்களுக்கும் / சம்பள கணக்கு அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. மேலே 6ல் படிக்கப்பட்ட அரசாணையில் இப்பணியிடங்களுக்கு 01.01.2012 முதல் 31.12.2014 வரையில் மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே 7ல் படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில் மேற்கண்ட 92 தொழிற்கல்வி ஆசிரியர் பணியிடங்களுக்கு தொடர் நீட்டிப்பு 31.12.2014 அன்றுடன் முடிவடைவதால் 1.1.2015 முதல் அப்பணியிடங்களுக்கு மேலும் ஐந்தாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கக் கோரியுள்ளார்.

3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் முதன் முதலாக உருவாக்கப்பட்டு மேலே 6ல் கண்டுள்ள அரசாணையில் 31.12.2014 வரை தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ள 92 தொழிற்கல்வி ஆசிரியர் நிலை–1 பணியிடங்களுக்கு (ரூ.9300–34800 தர ஊதியம் 4600 என்ற ஊதிய விகிதத்தில்) 1.1.2015 முதல் 31.12.2015 வரை அல்லது தற்காலிக பணியிடங்களுக்கு தொடர் நீட்டிப்பு குறித்து நிதித் துறையின் மறு ஆய்வில் முடிவெடுக்கும் வரை இதில் எது முந்தையதோ அதுவரை தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. இந்தப் பணியிடங்களில் உள்ள பணியாளர்கள் அடிப்படை ஊதியம் தவிர அகவிலைப்படி போன்ற இதர படிகளையும் அவ்வப்போது நடைமுறையில் உள்ள விகிதங்களில் பெற தகுதி உடையவர்களாவார்கள்.

5. இப்பணியிடங்களுக்கான ஊதியம் மற்றும் படிகளுக்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படும்:-

<u>அரசுப் பள்ளிகள்</u>

2202- பொதுக்கல்வி–02 இடைநிலைக்கல்வி–109 அரசு இடைநிலைப் பள்ளிகள்–I திட்டத்தில் சேராதது–AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம்–01 சம்பளங்கள் (த.தொ.கு.2202–02 109 AA 0108)

<u>நகராட்சி மற்றும் மாநகராட்சி அமைப்பில் உள்ள பள்ளிகள்</u>

2202- பொதுக்கல்வி – 02 இடைநிலைக் கல்வி 109 –அரசு இடைநிலைப் பள்ளிகள்–I திட்டத்தில் சேராதது – AB – நகராட்சி மற்றும் மாநகராட்சி இடைநிலை/ மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள் – 01 சம்பளங்கள் (த.தொ.கு.2202–02 109 AB 0106)

<u>உதவிபெறும் பள்ளிகள்</u>

2202- பொதுக்கல்வி–02 இடைநிலைக்கல்வி–110 அரசு சாரா இடைநிலைப் பள்ளிகளுக்கு நிதி உதவி–I திட்டத்தில் சேராதது–AA அரசு மானியம் பெறும் மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு நிதியுதவி –79 சம்பளமானியங்கள் (த.தொ.கு.2202–02 110 AA 7902)

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.72344/கல்வி–II/2014, நாள்–28.01.2015ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–79.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.
சார் சம்பள கணக்கு அலுவலர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை–15.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாநிலக் கணக்காயர், சென்னை–35.

<u>நகல்</u>
நிதிக் (கல்வி II)துறை, சென்னை–9.
அ.ந.மு. பிரிவு, சென்னை–9.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

அரசு சார்புச் செயலாளர்.